மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

தொழிற்பயிற்சி நிலையம்

***11136—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் மகளிருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் மகளிருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி என்பது வள்ளியூரில் ஆரம்பித்து, பத்மநாபபுரம் வரை சென்று. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வசந்தகுமார், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார் என்று கேட்கலாம்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கென்று சில சட்ட திட்டங்கள் உண்டு. ஓர் உறுப்பினர் ஓர் அதிகாரியுடன் பேச வேண்டுமென்றால், இந்த அவையை விட்டு, பின் பகுதிக்குச் சென்று பேசிவிட்டு வர வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராஜ், முன்னாள் காவல்

துறை ஆணையாளர் அவர்கள், அவருடைய இடத்திலிருந்து ஓர் அதிகாரியிடம் ஏதோ ஒரு பேப்பரைக் கொடுக்கிறார். அந்த அதிகாரியும் அங்கிருந்தே அதை வாங்கிக் கொள்கிறார். It is highly illegal. இதுபோன்று இந்த சபையில் எப்பொழுதுமே நடக்கவே நடக்காது; இது ஒழுங்கீனம். இதுகுறித்து இருவருக்கும் தாங்கள் அறிவுறுத்த வேண்டும்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்று இனிமேல் நடந்துகொள்ள வேண்டாம் என்று உறுப்பினர்களுக்கு நான் அறிவுறுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் ஏழைப் பெண்கள் அதிகமாக வசித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே அங்கே TASMAC கடைகள் அதிகமாக இருப்பதால், பெண்கள் தினமும் கஷ்டப்பட்டு, அவர்கள் கணவர்களுடன் சண்டையிடுவதற்கே நேரம் சரியாக இருக்கிறது. எனவே, பெண்களுக்கு ஒரு பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்து, அவர்களுக்கு நல்ல மனநிலையையும், நல்ல தேக ஆரோக்கியத்தையும் கொடுத்து, வருங்காலத்திலாவது குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கு நமது அரசு முடிவெடுக்க வேண்டும். திருநெல்வேலியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும், நாகர்கோவிலில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் இருக்கின்றன. இவ்விரு தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 100 கி.மீ. இருக்கிறது. எனவே, தயவுசெய்து எங்கள் இட்டமொழி, பரப்பாடி ஏரியாவில் பெண்களுக்கான ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து, அவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றும்படி நமது மாண்புமிகு அவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, வள்ளியூரிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள நாகர்கோவிலில் பெண்களுக்கென்று தனியாகச் செயல்பட்டுவரும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட 785 இருக்கைகளில், 647 இடங்கள் நிரப்பப்பட்டு,

138 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பெண்களுக்கென்று ஒப்பளிக்கப்பட்ட 329 இருக்கைகளில் 268 இருக்கைகள் காலியாக உள்ளன.

எனவே, நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் மகளிருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம் தனியாகத் துவங்க வேண்டிய தேவை தற்போது ஏற்படவில்லை. மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவிகித இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்டக் கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ், பெண்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 798 இடங்களில், 745 காலியிடங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் பதில் ஏற்புடையதாக இருந்தாலும், ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பரந்து விரிந்த தொகுதி எங்கள் தொகுதி. வள்ளியூரிலிருந்து பத்மநாபபுரம் போக வேண்டுமென்றால் 2½ மணி நேரம் ஆகும். பத்மநாபபுரத்திலிருந்து இட்டமொழிக்கு போக வேண்டுமென்றால், 3 மணி நேரம் ஆகும். ஏற்கெனவே சாலைகளெல்லாம் மேடும், பள்ளமுமாக இருக்கின்றன; மெதுவாகத்தான் போகமுடியும். எனவே, இங்கிருந்து ஒரு பெண் திருநெல்வேலிக்கும், நாகர்கோவிலுக்கும் போய் பயிற்சி எடுக்க வேண்டுமென்றால், அது நடக்கக்கூடிய காரியம் இல்லை. கல்வியும், தொழிலும் இந்த நாட்டிற்குத் தேவை. எனவே அரசு நிதிநிலைமையைக் குறிப்பிட்டோ அல்லது அங்கே போதுமான அளவில் மாணவியர்கள் சேரவில்லை என்றோ ஒரு பதிலைச் சொல்லாமல், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கின்ற வகையில், எனது தொகுதியிலும் ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பித்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி அவசியம் ஏற்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கும்முன்னர், அப்பகுதியில் மாணவ, மாணவியர் இடையே உள்ள வரவேற்பு, அப்பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட மகளிர் கல்வி மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக பல சிறப்பான நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவரும் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

பேருந்து வசதி

***10966—திரு. பி. மூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதி, மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து சர்வேயர் காலனி, மூன்றுமாவடி, கண்ணனேந்தல், அய்யர் பங்களா, ஆனையூர் வழியாக திருப்பரங்குன்றம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை, மாட்டுத்தாவணியிலிருந்து சர்வேயர் காலனி, மூன்றுமாவடி, கண்ணனேந்தல், அய்யர் பங்களா,